# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2014 மே மாதம் 20 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ அஜந்த நிரோஷன் பாதுக்க உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் அத்துடன் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு ,மற்றும் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(Îæ/vi (1)14/01)**

அ. மேல் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில், மேல் மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் பாடசாலைகளின் 2013 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்கு இணங்க இலங்கையில் அந்த 03 மாவட்டங்களுக்கும் உரித்தான இடங்கள் எவை ?

ஆ. மேல் மாகாண மாகாண சபையின் கீழ் 2013 ஆம் ஆண்டில் சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

இ. மாகாண சபையின் கீழ் நிர்வாகத்தில் உள்ள பாடசாலைகளில் கணித பாடத்தில் சித்தி எய்தாத மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஈ. மாகாண சபையின் கீழ் நிர்வாகத்தில் உள்ள பாடசாலைகளில் ஆங்கில பாடத்தில் சித்தி எய்தாத மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

உ. இப் பரீட்சை முடிவு தொடர்பாக நீங்கள் திருப்திப் படுகின்றீர்களா ?

ஊ. இல்லையாயின் ஏன் ? எடுத்த நடவடிக்கை யாது ?

**VI.** **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

**VII.** **அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்**

**VIII.** **தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்**

**IX.** **சபை நடவடிக்கை I**

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

**பிரேரணை :**

*“இன்றைய தினம் பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட தினம் ஒன்றாகக் கருதி செயற்பட வேண்டும்.”*

**X.** **சபை நடவடிக்கை II**

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

**பிரேரணை :**

*“இன்றைய தின நிகழ்ச்சி நிரலின் செயற்பாடுகளுக்கு விதி இலக்கங்கள் 57(1), 57(4), 57(5) மற்றும் விதி இலக்கம் 86(2), 91(1) மற்றும் விதி இலக்கம் 110 ஆகிய வற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளினால் எந்தவொரு தடை ஒன்றும் ஏற்படக் கூடாது எனக் கருதிச் செயற்பட வேண்டும்.”*

## XI. பொது நடவடிக்கை

01. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு ,மற்றும் தொழில் வாய்ப்பு ,பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சர் (மே.மா) :

*"2014 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்படும் நிதிக் கூற்றின் திருத்தம்- 2014 இனை அங்கீகரிக்க வேண்டும்."*

02. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு ,மற்றும் தொழில் வாய்ப்பு ,பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சர் (மே.மா) :

*" 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றின் திருத்தம் - 2014 இற்கு உரியதான 2014 ஆம் ஆண்டின் ....... ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) நியதிச்சட்டத்தினை அங்கீகரிக்க வேண்டும்."*

03. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு ,மற்றும் தொழில் வாய்ப்பு ,பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சர் (மே.மா) :

**பிரேரணை :**

**மாகாண சபை முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்துதல் - 2013 ஆம் ஆண்டு**

"முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்துதல் - 2013" என்ற பெயர் கொண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள படி முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்தும் போது 2012 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தின் 07 வது பிரிவின் ஏற்பாட்டிற்கு இணங்க செயற்பட்டுள்ள படியாலும்,

இத் திருத்தத்தை மேற்கொள்வதற்காக மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் சபையின் அனுமதியின் கீழ் கிடைக்கப்பட்டுள்ள படியாலும்,

அவ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள படி ஒவ்வொரு முற்பணக் கணக்குகளின் எல்லைகளையும் திருத்துவதை இந்த மேல் மாகாண மாகாண சபை அங்கீகரிக்கின்றது.

04. **கௌரவ ஆளுநர் அவர்களின் கொள்கை அறிக்கையினை சமர்ப்பித்தற்கு பதிலாக நன்றி தெரிவிக்கும் பிரேரணை :**

214.04.30 ஆந் திகதி சபைக் கூட்டத்தில் கௌரவ ஏ.டி. காமினி திலகசிறி உறுப்பினரினால் சமர்ப்பிக்கப்பட்டு கௌரவ ஹெக்டர் பெத்மகே உறுப்பினரினால் வழிமொழியப்பட்ட பின் 2014.05.20 ஆந் திகதி க்கு ஒத்திவைக்கப்பட்ட விவாதம்

"மக்கள் ஆணையை மீண்டும் உறுதிப்படுத்தியும், பெரும்பான்மை மக்களின் நம்பிக்கைக்கு மதிப்பளித்தும் எல்லா அரசியல் கட்சிகளினதும் நீதியான மற்றும் பயனுள்ள அரசியல் கருத்துக்களுக்கு கௌரவம் செலுத்தியும் மேல் மாகாணத்தின் மனித வள மற்றும் பௌதீக வளத்தை ஒன்று சேர்த்தும் தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள மிகப் பெரிய தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கு இணைந்த வகையில் மத்திய அரசின் ஒத்துழைப்பினை தொடர்ந்தும் பெற்றுக் கொண்டு நடைமுறைப் படுத்தப்படும் அபிவிருத்தி செயற்பாட்டின் ஊடாக அபிவிருத்தியின் பலாபலன்கள் யாவருக்கும் பகிர்ந்து செல்லும் முறையில் மேல் மாகாண மக்களின் ஒரே ஒரு எதிர்பார்ப்பான கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களின் நகர கிராமிய மற்றும் தோட்டப் பிரிவிற்கு உரிய பொது மக்களின் முன்னேற்றத்திற்காக மாகாணத்தினுள் பொருளாதார அபிவிருத்தி ஒன்றினை ஏற்படுத்தி மாகாண மக்களின் பொருளாதார, சமூக, கலாச்சார, சமய மற்றும் ஆன்மீக அபிவிருத்தி ஒன்றினை ஏற்படுத்தும் நோக்கை முதன்மைப்படுத்தி மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவை மேல் மாகாண மாகாண சபையின் VI வது மாகாண சபைக்காக தயாரித்த கொள்கை அறிக்கை 2014 ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதி அதாவது (இன்று) இச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது தொடர்பாக மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அல்ஹாஜ் எஸ். அலவி மௌலான அவர்களுக்கு இந்த கௌரவ சபை தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2014.05.07 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,

பத்தரமுல்ல.